
# திராவிடத்தால் வாழ்கிறோம்

983

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்


# கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

**தமிழ்.கா.அமுதரசன்**

25

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வு பூர்வமாக விவரிக்கும் தொடர்!

# கடமையில் பின்வாங்காத கழக அரசு!
## ‘கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் - 2009’






“கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் - 2009 ஐ முடக்கும் வகை யில் செயல்பட்டு வரும் ஒன்றிய அரசுக்கு எதிராக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றம் வரை சென்று வாதாடியதன் விளைவாக, நமக்குரிய நிதியைப் பெற்றுள்ளோம். எனவே, கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின்படி 2025-2026 கல்வியாண்டுக்கான மாணவர் சேர்க்கை நடைமுறைகள் தொடங்குகின்றன. கல்வியைப் பறிக்க எத்தனை தடைகள் வந்தாலும், நம் திராவிட மாடல் அரசு முறியடிக்கும்” என்று, பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் அவர்கள், கடந்த சில நாட்களுக்கு முன்பு அவரது முகநூலில் அறிவித்திருந்தார்.

அதன்படி, தமிழ்நாடு அரசு ‘குழந்தை களுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம்- 2009 (RTE ACT)’ -இன் கீழ் 2025-26 கல்வியாண்டுக்கான மாணவர் சேர்க்கையை அறிவித்துள்ளது. இதற்காக, கடந்த 4 ஆண்டுகளாக நமது அரசு நடத்திய போராட்டம் சாமர்த்தியமானது. சட்ட ரீதியாக, அரசு, ஆட்சி அதிகார ரீதியாக, அரசியல் ரீதியாக எனப் பலமுனைப் போராட்டங்களை நடத்தியது என்றால் மிகையில்லை.

### 2009 - ஆம் ஆண்டு

2009 - ஆம் ஆண்டில், ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சிக்காலத்தில் மன்மோகன் சிங் பிரதமராக இருந்தபோது, கொண்டுவரப்பட்ட மிகச் சிறந்த திட்டங்களில் ஒன்று ‘குழந்தை களுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் - 2009 (The Right of Children to Free and Compulsory Education Act-2009)’. இந்தச் சட்டத்தின் கீழ் தனியார் பள்ளிகளில் ஏழை மாணவர்களுக்கும் கல்வி கற்க வாய்ப்பு உருவாக்கப்பட்டது. அதற்கான கட்டணத்தை ஒன்றிய - மாநில அரசுகள் பகிர்ந்துகொள்ளவும் வழிவகை செய்யப்பட்டது.

இந்தச் சட்டத்தின்படி, நாடு முழுவதும் உள்ள அனைத்து தனியார் பள்ளிகளிலும் எல்.கே.ஜி. முதல் எட்டாம் வகுப்பு வரை, மொத்தமுள்ள மாணவர் சேர்க்கையில் 25 சதவிகித இடங்கள் ஏழை மாணவர்களுக்கு இலவசமாக ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஒன்றிய அரசின் கல்வி அமைச்சகத்தின் கீழ் செயல்படும் வாரியம் (PAB-PROJECT APPROVAL BOARD) இதனைக் கண்காணித்து ஒப்புதல் அளிக்கும் அமைப்பாக இருந்தது. பள்ளிகளுக்குச் செலுத்த வேண்டிய கட்டணத்தில் 60 சதவிகிதத் தொகையை ஒன்றிய அரசு வழங்கும். 40 சதவிகிதக் கட்டணத்தைப் பள்ளிகளுக்கு மாநில அரசு வழங்கும். இதன்படி 2010 - ஆம் ஆண்டிலிருந்து இலவச கட்டாய கல்வி உரிமைச் சட்டம் செயல்பட்டு வந்தது.

### மாநில பள்ளிக் கல்வித்துறை

மாணவர் சேர்க்கை அறிவிப்பு மற்றும் விண்ணப்பத்தை அந்தந்த மாநிலத்தில் உள்ள பள்ளிக் கல்வித்துறை வெளியிடும். விண்ணப்பிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை அடிப்படையில், மாணவர் சேர்க்கை நடைபெறும். ஒரு பள்ளியில் 25 சதவிகித இடத்துக்கும் அதிகமான எண்ணிக்கையில் விண்ணப்பங்கள் வரப்பெற்றால், குலுக்கல் முறையில் மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு சேர்க்கப்பட்டனர். இதர மாநிலங்களில் உள்ள நடைமுறைபோல, தமிழ்நாடு அரசின் பள்ளிக் கல்வித் துறை இணையதளத்தில், இதற்கான விவரங்கள் வெளியிடப்பட்டு, சேர்க்கை நடைபெற்று வந்தன. ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் மாதத்தில் தொடங்கி, மே மாத இறுதிக்குள் சேர்க்கை நடவடிக்கைகள் இறுதி செய்யப்பட்டு வந்தன. ஜுன் மாதத்தில் பள்ளிகள் திறப்பதற்கு முன் ‘கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின்படி’ சேர்க்கைகள் முடிவடையும்.

### மறுக்கப்பட்ட நிதி

இந்தச் சூழலில், 2021-2022- கல்வியாண்டில் இருந்து 2024-2025 வரையிலான நான்கு ஆண்டுகளாகக் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின்படி, தமிழ்நாட்டுக்குத் தர வேண்டிய நிதிப் பகிர்வில் பாரபட்சமாக நடந்துகொள்ளத் தொடங்கியது ஒன்றிய அரசு.

> “கடந்த நான்கு ஆண்டுகளாக, கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின்படி தமிழ்நாட்டுக்கு ஒதுக்க வேண்டிய நிதியை ஒதுக்காமல், ஏழை மாணவர்களின் கல்வி உரிமையை மறுத்து வந்தது ஒன்றிய அரசு.”

கடந்த 2021-2022 கல்வியாண்டில் 7,745 பள்ளிகளில் 1,21,208 குழந்தைகள், பாலர் வகுப்புகளில் சேர்க்கப்பட்டனர். அப்போது, 1-8ஆம் வகுப்பு வரை 2,77,185 மாணவர்கள் படித்து வந்தனர். அந்த ஆண்டில் பாலர் வகுப்பு மாணவர்களுக்காக ரூ.98.43 கோடியும், பிற மாணவர்களுக்காக ரூ.266 கோடியும் கட்டணமாகச் செலுத்த வேண்டியிருந்தது.

ஆனால், ரூ.256.17 கோடிக்கு மட்டுமே வாரியம் (PAB) ஒப்புதல் அளித்தது. அதில் ஒன்றிய அரசு 60 சதவிகிதத் தொகையான ரூ.153.70 கோடி வழங்கியிருக்க வேண்டும். இப்போது வரையிலும் அந்தத் தொகையை ஒன்றிய அரசு வழங்கவில்லை. இருப்பினும், அந்த ஆண்டில் ரூ.364.43 கோடியைப் பள்ளிகளுக்கு தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது.

தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை தரவு களின்படி, எல்.கே.ஜி., யு.கே.ஜி., மாண வர்களுக்கான தொகை முழுவதையும் தமிழ்நாடு அரசே வழங்கி வருகிறது. பிற மாணவர்களுக்கான கட்டணத் தொகையில் மட்டுமே 60 சதவிகிதத்தை ஒன்றிய அரசு வழங்குகிறது.

இருப்பினும், 2022-2023 கல்வியாண்டில் 7,769 பள்ளிகளில் பாலர் பள்ளிகளில் சேர்க்கப்பட்ட ஒரு லட்சத்து 18 ஆயிரத்து 582 குழந்தைகள், மற்ற வகுப்புகளில் படித்து வந்த 2 லட்சத்து 98 ஆயிரத்து 486 பேர் ஆகியோருக்கான கட்டணமாக, ரூ.383.59 கோடியை, பள்ளிக்கூடங்களுக்கு தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது. அதிலும் வாரியம் ஒப்புதல் அளித்த தொகையில் ஒன்றிய அரசு வழங்க வேண்டிய ரூ.188.99 கோடி இதுவரை தமிழ்நாடு அரசுக்கு வழங்கப்படவில்லை.

அதன்பின் 2023-2024, 2024-2025 ஆகிய இரு கல்வி ஆண்டுகளிலும், பள்ளிகளுக்குச் செலுத்த வேண்டிய தொகையில் ஒன்றிய அரசால் வழங்க வேண்டிய ரூ.208.20 கோடி, ரூ.222.60 கோடி ஆகிய தொகையும் இதுவரை விடுவிக்கப்படவில்லை. இவையெல்லாம் நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ள தகவல்கள்.

அதாவது கடந்த நான்கு ஆண்டுகளாக, கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின்படி தமிழ்நாட்டுக்கு ஒதுக்க வேண்டிய நிதியை ஒதுக்காமல், ஏழை மாணவர்களின் கல்வி உரிமையை மறுத்து வந்தது ஒன்றிய அரசு. அதற்குக் காரணம், தேசிய கல்விக் கொள்கை என்கிற மறைமுக இந்தித் திணிப்பு கல்விக் கொள்கை. அதை ஏற்பதற்கு, தமிழ்நாடு அரசு மறுப்பதால், கட்டாயக் கல்வி உரிமை நிதி ஒதுக்கீட்டில் கை வைத்தனர் ஒன்றிய ஆட்சியாளர்கள். ஆனால், ஏற்றுக்கொண்ட கடமையிலிருந்து பின்வாங்காமல், மாணவர்களின் கல்வி தடைபடாத வகையில் பார்த்துக்கொண்டது கழக அரசு. அதே நேரத்தில் சட்டப் போராட்டத்தையும் நடத்தத் தொடங்கியது.

**...தொடரும்**

## அரசியல் பயில்வோர் அணி திரள்க!

பெரியாரியல் அறிஞர் வே.ஆனைமுத்து, 1925-ஆம் ஆண்டு பிறந்து, 1946-ஆம் ஆண்டு முதல் பெரியாரைப் பின்பற்றத் தொடங்கி, 2021-ஆம் ஆண்டு 96 வயதில் அவர் மறைவெய்தும் வரை சுமார் 75 ஆண்டுகள் சுயமரியாதை இயக்கச் சிந்தனை செயல்பாடுகளையே தனது வாழ்க்கையாக அமைத்துக் கொண்டவர். மார்க்சிய - பெரியாரிய பொதுவுடைமைக் கட்சியை நிறுவி, இட ஒதுக்கீட்டு வரலாற்றில் பெரும்பங்காற்றியவர். அவரது நூற்றாண்டு நிறைவு விழா, வரும் 10.10.2025 வெள்ளிக்கிழமை சென்னையில் நடைபெற உள்ளது.

சென்னை, ராஜா அண்ணாமலைபுரத்தில் உள்ள, முத்தமிழ்ப் பேரவை டி.என்.இராஜரத்தினம் கலைஅரங்கத்தில் காலை 10 மணி முதல் மதியம் வரை நடைபெற உள்ளது. நிகழ்ச்சியில், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி அவர்கள் கலந்துகொண்டு வே.ஆனைமுத்து அவர்களின் நினைவு மலரை வெளியிட்டு, சிறப்புரை நிகழ்த்த உள்ளார்.

மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக் கட்சியின் துணைப் பொதுச்செயலாளர் வாலாசா வல்லவன் தலைமையேற்க, கழகத் துணைப் பொதுச்செயலாளர் ஆ.ராசா, போக்குவரத்துத் துறை அமைச்சர் கா.சி.சிவசங்கர், திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் சுப.வீரபாண்டியன், திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைவர் கொளத்தூர் மணி, திராவிடர் கழகப் பிரச்சாரச் செயலாளர் வழக்கறிஞர் அ.அருள்மொழி, பேராசிரியர் நாகநாதன், கழக கல்வியாளர் அணித் தலைவர் செந்தலை கவுதமன் உள்ளிட்டோர் உரை நிகழ்த்த உள்ளனர். சுயமரியாதைச் சுடராக பெரியாரியத்துக்குப் பெரும் பங்களிப்பு செய்த ஆனைமுத்து அவர்களின் நூற்றாண்டு நிறைவுவிழா, அரசியல் பயில்வோர் அணி திரள்க.

## ஃப்ளாஷ்பேக்



### கழகம் அறிவித்த கருப்பு தினத்தில் தலைவருடன்!



வி.விமல்

2014-ஆம் ஆண்டு, செப்டம்பர் 25-ஆம் தேதி ஐ.நா. மன்றத்தில், ராஜபக்சே உரையாற்றுவதற்கு எதிராக, கருப்பு தினம் கடைப்பிடிக்க ஆணையிட்டார், கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள். இளைஞர் அணி சார்பில், பொதுமக்களிடம் துண்டறிக்கைப் பிரசாரம் செய்தோம். திருப்பரங்குன்றம் ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளராகப் பணியாற்றி வந்த நான், அன்றைய தினம் சென்னை வந்திருந்தபோது, இன்றைய கழகத் தலைவர் அவர்களை அறிவாலயத்தில் சந்திக்க வாய்ப்பு அமைந்தது. தலைவரும் கருப்புச் சட்டையில் ராஜபக்சேவுக்கு எதிர்ப்பினைப் பதிவு செய்தார்.

**- வி.விமல்,**
**மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்,**
**மதுரை தெற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

கருவூலம்

### கழகத் தேர்தல்!

1960-ஆம் ஆண்டு, செப்டம்பர் 25-ஆம் தேதி, கழகத்தின் பொதுக்குழுக் கூட்டம், சென்னை இராயப்பேட்டை, லாயிட்ஸ் சாலையில் கூடி, கழக நிர்வாகிகளைத் தேர்ந்தெடுத்தது. கழகப் பொதுச் செயலாளராக பேரறிஞர் அண்ணாவும், அவைத் தலைவராக ஈ.வெ.கி.சம்பத்தும், பொருளாளராக கலைஞரும் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.